பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

02 08 2026 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- சுவாமி விவேகானந்தரின் தொலைநோக்குப் பார்வை இளைஞர்களுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- தேர்வுகள் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.
- வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கு கல்வி அவசியம் என்று மாநில சமூகநீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு கூறியுள்ளார்.
- காவிரி விவகாரம் தொடர்பான கர்நாடக முதலமைச்சரின் செயல்பாடுகளுக்கு பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.
- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில், இந்தியா மேலும் 5 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

சுவாமி விவேகானந்தரின் தொலைநோக்குப் பார்வை இளைஞர்களுக்கு வழிகாட்டியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மைசூருவில் சுவாமி விவேகானந்தரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இளையோர் கலாச்சார மையத்தை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இளைஞர்களின் சிறப்பான செயல்பாடுகள் காரணமாக அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் விளையாட்டுத்துறையில் சாதனைகள் படைக்கப்பட்டு வருவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

தன்னம்பிக்கையுடன் சரியான திசையில் பயணித்தால் இலக்குகளை எட்ட முடியும் என்றும், இளைஞர்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகள் அவர்களை மாபெரும் ஆக்கப்பூர்வ சக்தியாக உருவெடுக்கச் செய்யும் என்று அவர் கூறினார்.

தூய்மை இயக்கம், நீர் மற்றும் இயற்கை ஆதாரங்களை பாதுகாப்பதில் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தேர்வுகள் வெளிப்படையாகவும், நேர்மையாகவும் நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கூட்டத்தில் முதுநிலை மருத்துவ மாணவர் சேர்க்கைக்கான நீட் நுழைவுத் தேர்வுக்கான தயார்நிலை குறித்து அவர் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் பேசிய அவர், இந்த நுழைவுத் தேர்வுக்கான தொழில்நுட்ப அம்சங்கள், பாதுகாப்பு கட்டமைப்புகள், மாணவர்களுக்கான வசதிகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் தயார் நிலையில் இருப்பதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாணவர்கள் மருத்துவ நுழைவுத் தேர்வுக்கான தேசிய வாரியம் வெளியிடும் அதிகாரபூர்வ தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

தேர்வு நடைபெறும் மையங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளை அமைச்சர் ஆய்வு செய்தார்.

இந்த நுழைவுத் தேர்வுக்காக 340 நகரங்களில் அமைகப்பட்டுள்ள 13 ஆயிரம் தேர்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

முதுநிலை மருத்துவ படிப்பு மாணவர் சேர்க்கைக்கான நீட் நுழைவுத் தேர்வுக்கு மொத்தம் 2 லட்சத்து 73 ஆயிரத்து 153 மாணவர்கள் பதிவு செய்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

வாழ்வில் முன்னேற்றம் அடைவதற்கு கல்வி அவசியம் என்று மாநில சமூகநீதித்துறை அமைச்சர் திரு. வன்னி அரசு கூறியுள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதியில் நடைபெற்ற கோடைவிழா நிறைவு நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்வி மனிதனுக்கு அடிப்படைத் தகுதிகளை வளர்த்துக்கொள்வதற்கான கருவியாக திகழ்கிறது என்று அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், 4 ஆயிரத்து 285 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

மலைவாழ் மக்கள் தங்களது குழந்தைகளுக்குத் தரமான கல்வி கிடைக்க உறுதுணையாக இருக்க வேண்டும் என்று திரு. வன்னி அரசு கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

காவிரி விவகாரம் தொடர்பான கர்நாடக முதலமைச்சரின் செயல்பாடுகளுக்கு பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதுதொடர்பாக தமிழக முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்த அழைப்பு விடுத்துவிட்டு தற்போது வரவேண்டாம் என்று கூறுவது முதலமைச்சர் பதவியின் மாண்பைக் குறைக்கும் செயலாக உள்ளது என்று கூறியுள்ளார்.

தமிழக நலனைக் கருத்தில் கொண்டு பிஜேபி செயல்படும் என்று அவர் கூறினார்.

தேர்தல் தொடர்பான கேள்விக்கு பதிலளித்த திரு. நயினார் நாகேந்திரன், இடைத்தேர்தல் உள்ளிட்ட அனைத்து தேர்தல்களிலும் பிஜேபி போட்டியிடும் என்று தெரிவித்தார்.

<<<<>>>>

திறமையான சட்ட வல்லுநர்களை உருவாக்குவதற்கு தரம் வாய்ந்த சட்டக் கல்வி அவசியம் என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.கே. இளந்திரையன் வலியுறுத்தியுள்ளார்.

தருமபுரியில் நடைபெற்ற அரசு சட்டக் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு சட்டப்படிப்பை முடித்த மாணவ-மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கி உரையாற்றினார்.

வழக்குரைஞர் தொழிலில் நேர்மையாக இருக்க வேண்டும் என்றும், அனுபவங்கள் மூலம் உயர்நிலையை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

செயற்கை நுண்ணறிவு மனிதர்களுக்கு உதவும் கருகியாக இருக்க வேண்டும் என்றும், இதுபோன்ற தொழில்நுட்பங்களை கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியது அவசியம் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் முதுமலைப் புலிகள் காப்பகத்திற்குட்பட்ட தெப்பக்காடு பகுதியில் வளர்ப்பு யானைகள் முகாம் உள்ளது.

இந்த முகாமில் வளர்க்கப்படும் யானைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவுகள் வழங்கப்படுவதைக் காண ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - சரவணன் - 40 செகண்ட்ஸ்)

<<<<>>>>

தமிழகத்தில், மேற்குத்தொடர்ச்சி மாவட்டங்களில் ஒருசில இடங்களில், அடுத்த 5 தினங்களுக்கு, மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் ஏனைய பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் இடி மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளை பொறுத்த வரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசிலப் பகுதிகளில், இன்றும், நாளையும், லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

வடதமிழகத்தில், ஒருசில இடங்களில், இரண்டு நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலை, இயல்பைக் காட்டிலும் இரண்டு முதல் மூன்று டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அதிகரிக்கக்கூடும் என்றும் வானிலை மையம் கூறியுள்ளது.

காஞ்சிபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்றிரவு பெய்த மழை காரணமாக, குளிர்ச்சியான சூழல் உருவானதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை, செங்கம், கலசப்பாக்கம், தண்டராம்பட்டு, கீழ் பெண்ணாத்தூர் போன்ற பகுதிகளில் சாரல் மழை பெய்தது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில், பொதுமக்களின் பேரணிக்கு எதிராக, அந்நாட்டு அதிகாரிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு Baloch Yekjehti குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

Mediterranean பகுதியில் உள்ள வனப்பகுதியில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை அடுத்து, அப்பகுதியில் உள்ள 2 ஆயிரத்து 500-க்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

இந்தியா - சீனா இடையே வர்த்தகதிற்காக, ஹிமாச்சலப் பிரதேசம் Kinnaur மாவட்டத்தில் உள்ள Shipki-la பாதை, ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

சட்டவிரோதப் பணப்பரிமாற்றம் தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள இரண்டு குடிமைப் பணி அதிகாரிகளின் ஒன்று புள்ளி ஒன்று இரண்டு கோடி ரூபாய் மதிப்பிலான வைப்புத் தொகையை அமலாக்கத்துறை இயக்குனரகம் முடக்கி வைத்துள்ளது.

<<<<>>>>

வருவாய்ப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது, கடத்தலில் ஈடுபட்டுள்ள ஐந்து வெளிநாட்டினர் உள்பட 20 பேர் செய்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் - தில்லி இடையேயுள்ள தேசிய நெடுஞ்சாலையில், ஷாஜஹான்பூரில் அமைக்கப்பட்டுள்ள பல்தட சுங்கச்சாவடி செயல்பாட்டிற்கு வந்துள்ளது.

<<<<>>>>

தென்காசி மாவட்டத்தில் 129 பயனாளிகளுக்கு 12 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர்கள் திரு. ஷாஜஹான் மற்றும் திரு. ராஜீவ் ஆகியோர் வழங்கினர்.

<<<<>>>>

திருவண்ணாமலை மாவட்டத்தில், மக்கள் கணக்கெடுப்புப் பணிகளை, ஆட்சியர் திரு வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

மத்திய அரசு ஊழியர்களுக்கான மருத்துவத் திட்டப் பயனாளிகள் சங்கத்தின் 8-வது நிறுவன தின விழா, சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் நடைபெற்றது.

<<<<>>>>

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் நடைபெறும் வல்வில் ஓரி விழாவை முன்னிட்டு இன்றும், நாளையும் போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக அம்மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில், இந்தியா மேலும் 5 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

கிளாஸ்கோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், மகளிர் குத்துச்சண்டை போட்டியில், ஆடவர் 80 கிலோ எடைப் பிரிவில், இந்தியாவின் Angush Panghal-ம், 60 கிலோ எடைப் பிரிவில், Sachin Siwach-ம் தங்கப் பதக்கம் வென்றனர்.

மகளிர் 51 எடைப்பிரிவில், இந்தியாவின் Sakshi Chaudhary-ம், 60 கிலோ எடைப்பிரிவில், Priya Ghanghas-ம், 70 கிலோ எடைப்பிரிவில், Arundhati Choudhary-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் வென்று Gulveer Singh சாதனை படைத்துள்ளார்.

பாரா ஆடவர் குண்டு எறிதலில், இந்தியாவின் Soman Rana வெள்ளிப் பதக்கமும், Shubham Juyal வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இதுவரை இந்தியா 13 தங்கம், 17 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் 4வது இடத்தில் உள்ளது.

இப்போட்டியில் பதக்கம் வென்றுள்ள வீரர், வீராங்கனைகளுக்கு குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

TAIPEI ஓபன் பேட்மின்டன் போட்டியின் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில், இந்தியாவின் Tanvi Sharma, வியட்நாமின் Thuy Linh NGUYEN-ஐ எதிர்கொள்கிறார்.

<<<<>>>>

துரந்த் கோப்பை கால்பந்து போட்டி அசாம் மாநிலம் குவஹாத்தியில் நேற்று தொடங்கியது.

அசாம் மாநிலத்தின் கலாச்சாரா மரபுகளை எடுத்துக்காட்டும் வகையில், கண்கவர் நிகழ்ச்சிகளுடன் இப்போட்டித் தொடங்கியது.

இந்தப் போட்டியை ராணுவமும், அசாம் மாநில அரசும் இணைந்து நடத்துகின்றன.

முதலாவது போட்டியில், ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 6-0 என்ற கோல் கணக்கில் போடோலாந்து அணியை வென்றது.

<<<<>>>>